(ஆ) குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை.

திரு. ரா. உமாநாத் ; தலைவர் அவர்களே, பேரவையின் முன்னால் ரிப்போர்ட்டுகளும் பேப்பர்களும் தினந்தோறும் வைக்கப் பெறுகின்றன. அவைகளை காலத்தில் வைத்தால்தான் படித்துக் கொண்டு வந்து டிஸ்கஷனுக்கோ; மாடிபிகேஷனுக்கோ ரெகமண்ட் செய்து எங்களால் பேச முடியும். இது ஒருபுறம் இருக்க, 71-72 ஆம் வருடத்து ஆடிட் ரிப்போர்ட்டை அது குடிநீர் வடிகால் வாரியத் தொடர்புடையது அதனை 81-ல் வைத்திருக்கிறீர்கள் இதனால் என்ன பயன்? 10 ஆண்டு களுக்குப் பிறகு வைக்கிறபோது, அப்படிக் கால தாமதம் ஆவதன் காரணம் என்ன என்பதைப் பற்றிய ஒரு அறிக்கை யையும் சேர்த்து வைக்க வேண்டும். நான் சொன்னது ஒரு சாம்பிளுக்காகத்தான். இந்த மாதிரி நிறைய விஷயங்கள் இருக் கின்றன. இது மாதிரியான கால தாமதம் சரியல்ல. அதை தயவுசெய்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பப்ளிக் அண்டர்டேக் கிங்ஸ் கமிட்டிக்கு இதுபற்றிய கருத்துக்களை அனுப்பி பரிசீலனை செய்ய ஆவனச் செய்யலாம்.

திரு. பொ. உத்திராபதி: எல்லா ரிப்போர்ட்டுகளும் தமிழில் வர வேண்டும்.

மாண்புமிகு பேரவை தலைவர்: ஏற்பாடுசெய்கிறேன்.

(இ) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சம்பந்தமான அறிவிக்கை.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசு எடுத்துக் கொள்வது சம்பந்தமாக எழுப்பப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னீர்கள். ஆனால் இன்று அது அப்படியே கடந்து போகிறதே? ஏன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: எதுவும் கடந்து போகாது, பின்னர் எடுத்துகொள்ளப்படும்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — விவாதம் (தொடர்ச்சி)

திரு. குமரி அனந்தன்: வணக்கத்திற்குரிய அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் என் கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். உலகத் தமிழ் மாநாடு சிறப்புற நடைபெற்றிருப் பதைப் பற்றி ஆளுநர் அவர்கள் மிகுந்த உவகையடைந்து உளம்கனிந்த பாராட்டுதல்களை இங்கே தந்திருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்புற நடைபெற்றிருக்கிறது என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. மிக அழகாக, பேரழகுப் பெட்டகமாக அமுதாலான சிற்பம்போல் இருக்கிற